DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No.323/ 2012 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 9 |
| Name | : P.சாலமோன் ராஜா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.03.2025.

--------

1 வது எதிரி ஆஜர்

**முதல் விசாரணை:**

நான் தேனீ அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மயக்கவியல் பிரிவில் மூத்த உள்ளிருப்பு மருத்துவராக பணிபுரிகிறேன். என்னுடைய பெயர் சாலமோன்ராஜா. வழக்கு குற்ற பத்திரிக்கையில் என்னுடைய பெயர் தவறுதலாக சாமுவேல் ராஜா என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி குற்ற வழக்கில் காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்தது நான் தான். நான் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்தபோது 20.07.2011 மாலை 06.45 மணிக்கு கே.கே.போஸ் வயது 45 என்ற ஆண் என்பவரை அவருடைய சகோதரர் கே.கே. ராஜாகிளி என்பவர் அழைத்துவந்தார். அவர் தன்னை தனக்கு தெரிந்த நபர் அரிவாள் கொண்டு தாக்கியதாக தன் கடையின் முன்பு பேரையூர் ரோட்டில் வைத்து சம்பவம் 20.07.2011 மாலை 06.30 மணிக்கு நடந்ததாக கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு ஒரு சிதைந்த காயம் அளவில் 12 செ.மீ x 4செ.மீ x 2 செ.மீ என்ற அளவில் கழுத்தின் பின்பக்க

பகுதியில் இருந்தது. ஒரு சிராய்ப்பு காயம் அளவுகளில் 1 செ.மீ x 1செ.மீ x 0.5 செ.மீ என்ற அளவில் கழுத்தின் முன் பக்க பகுதியில் இருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக அவரை மதுரை அரசு இராசாசி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை.

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

ஒம் / R.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.